**CNR.No.TNVL1E-000429-2017**

**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி,திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13ம் நாள்)

**அசல் வழக்கு எண்.12/2017**

**(வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.24/2015)**

1. பாத்திமா
   க/பெ தமிழரசன்
2. ரீட்டா
   க/பெ சார்லஸ் .. வாதிகள்

/ எதிர் /

1. லட்சுமணன்
   த/பெ பூங்காவனம்
2. ராமாம்மாள்(இறப்பு)
   த/பெ பூங்காவனம்
3. கம்சலா
   க/பெ லட்சுமணன்
4. பெருமாள்
   த/பெ லட்சுமணன்
5. விஸ்வநாதன்
   த/பெ லட்சுமணன்
6. வில்வநாதன்
   த/பெ லட்சுமணன்
7. தமிழரசி
   த/பெ லட்சுமணன்
8. கலா
   த/பெ லட்சுமணன்
9. சுகந்தி
   த/பெ லட்சுமணன்
10. சுமதி
    க/பெ பஞ்சாட்சரம்
    (இ.ம.எண்.120/2021ல் கடந்த 01.04.2021ல்
    பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி 10ம்
    பிரதிவாதி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்.)

.... பிரதிவாதிகள்

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 12.03.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.சி. தேவக்குமார், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.உமர், அவர்கள் ஆஜராகியும், மற்ற பிரதிவாதிகள் அனைவரும் தோன்றாதரப்பினர்கள் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பு</u>**

01) தாவா சொத்தில் வாதிகளின் உரிமைமூலம் விளம்புகை செய்யவேண்டியும், தாவா சொத்தில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>02) திருத்தியமைக்கப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:</u>

கடந்த 26.09.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையஆவணத்தின்மூலம் தாவா சொத்தை வாதிகள் தகுந்த மறுபயனுக்காக பாலகிருஷ்ணன் என்பவரிடம் கிரையம் பெற்று, மேற்படி, கிரையஆவண தேதி முதல் தாவா சொத்தில் தொடர் அனுபவசுவாதீனத்தில் இருந்து வருகின்றனர்.

தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களில் வாதிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பல்வேறு செலவுகள் செய்து, வாதிகள் மேம்பாடு செய்துள்ளனர். இந்நிலையில், தாவா சொத்தினை

அபகரிக்கும் நோக்கில், தாவா சொத்தில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகின்றனர்.

வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 2ம் பிரதிவாதி இறந்துள்ளார். அவரது சட்டப்படியான வாரிசாக 10ம் பிரதிவாதி வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆகையால், தாவா சொத்தில் வாதிகளின் உரிமைமூலம் விளம்புகை செய்யவேண்டியும், தாவா சொத்தில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) 1ம் பிரதிவாதியால் தனியாகவும், 3ம் பிரதிவாதியால் தனியாகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ள தனித்தனியான எதிர்வழக்குரைகளின் பொதுவான சுருக்கம் :**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை வாதிகள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

தாவா சொத்து பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்து என்பது உண்மை கிடையாது. வாதிகள் பெயருக்கு அவரால் கடந்த 26.09.2014 தேதியிட்டு, எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட கிரையஆவணம் சட்டப்படி செல்லாத ஒன்றாகும்.

தாவா சொத்தில் வாதிகள் எந்தகாலத்திலும், அனுபவசுவாதீனத்தில் இருந்தது கிடையாது. தாவா சொத்தும், இதர சொத்துக்களும், 1ம் பிரதிவாதி குடும்பத்து கூட்டுகுடும்ப பூர்வீகச் சொத்துக்களாகும். கூட்டுகுடும்ப கர்த்தா என்ற அடிப்படையில், 1ம் பிரதிவாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் பெயரில் பல்வேறு சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது.

மேற்படி சொத்துக்களில் இதுநாள் வரையில், பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. தாவாசொத்து உள்ளிட்ட மற்ற சொத்துக்கள் அனைத்திலும், பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டுமென 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.47/2015 என்ற பாக வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தாவா சொத்து தொடர்பான கிரைய ஆவண தேதியிலிருந்து சுமார் 40 நாட்களுக்குள் 1ம் பிரதிவாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் மர்மமான முறையில் இறந்துள்ளார். அவரது இறப்பு குறித்து புலன்விசாரணை நடந்து வருகிறது. 1ம் வாதியின் கணவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆவார். மேற்படி அரசியல் செல்வாக்கின்மூலம் தாவா சொத்து தொடர்பான கிரையஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது.

தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை. வழக்குரை சொத்து விவரம் தவறானது. தாவாவில் வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது. ஆகையால், பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தினை சட்டத்திற்கு புறம்பாக அபகரிக்கும் நோக்கில், பொய்யான சங்கதிகளுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தபின், இவ்வழக்கில் முடிவு காணவேண்டிய கீழ்க்கண்ட எழுவினாக்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

(i) தாவா சொத்தில் வாதிகள் அனுபவசுவாதீனத்தில் உள்ளனரா ?

(ii) தாவாவில் வாதிகள் முன்வைத்துள்ள உரிமைமூலம் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் போன்றவை வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

(iii) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன ?

**05)** வாதிகள் தரப்பில் 2ம் வாதி ரீட்டா என்பவர் வா.சா.1 ஆகவும், சுப்பிரமணி என்பவர் வா.சா.2 ஆகவும், தமிழரசன் என்பவர் வா.சா.3 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். வாதிகள் தரப்பில் வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின்மூலம் ஆரம்பத்தில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**06)** வழக்கு தரப்பினர்களுக்கு இடையில் இவ்வழக்கினை தவிர அ.வ.எண்.47/2015 மற்றும் அ.வ.எண்.65/2015 ஆகிய மற்ற இருவழக்குகளும் இந்நீதிமன்றத்தில் விசாரணை நிலுவையில் இருந்துள்ளது. மேற்படி மூன்று வழக்குகளையும், ஒன்றாக கூட்டு விசாரணை செய்யும் அடிப்படையில் இவ்வழக்கின் வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின் மூலம் கூடுதல் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, அ.வ.எண்.65/2015ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.32 வரையில் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது

**07)** ஆனால், பின்னிட்டு, மேற்படி மூன்று வழக்குகளுக்கான விசாரணை இந்நீதிமன்றத்தில் கூட்டாக நடைபெறாமல், ஒவ்வொரு வழக்குகளின் விசாரணை தனித்தனியாக நடந்துள்ளது. அச்சமயம், ஏற்கனவே இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.32 வரையிலான ஆவணங்கள் அனைத்தும், அ.வ.எண்.65/2015 வழக்கில் குறியீடு செய்யப்பட்டு, மூன்று வழக்குகளும் தனித்தனியான வழக்கு விசாரணைகள் நடைப்பெற்றுள்ளது.

**08)** இச்சூழ்நிலையில், இவ்வழக்கிலும், அ.வ.எண்.65/2015 வழக்கிலும், ஒரே ஆவணங்கள் இரண்டு முறை குறியீடு

செய்யப்பட்டுள்ளதால், தேவையற்ற சட்ட சிக்கல் ஏற்படுவதை நிவர்த்தி செய்யும் வகையில், இவ்வழக்கில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.32 வரையிலான ஆவணங்களை நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் தன்னிச்சையாக நீக்கறவு செய்துள்ளது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும், அ.வ.எண்.65/2015 வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளதால், அவ்வழக்கில் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**09)** தாவாவை எதிர்வழக்காடியுள்ள 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி கம்சலா என்பவர் பி.சா.1 ஆகவும், நூருல்லாபாஷா என்பவர் பி.சா.2 ஆகவும், ராஜேந்திரன் என்பவர் பி.சா.3 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். 1,3 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**10)** இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது.

**11) எழுவினாக்கள் 1 மற்றும் 2ற்கான தீர்வு:-**

இவ்வழக்கில், வனையப்பட்டுள்ள எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஆகியவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாக உள்ளதால், மேற்படி இரு எழுவினாக்களையும், இந்நீதிமன்றம் ஒருங்கிணைந்த தீர் முடிவிற்கான பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

கடந்த 26.09.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்மூலம் தகுந்த மறுபயனுக்காக தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து வாதிகள்

கிரையம் பெற்று, தாவா சொத்தின் தொடர் அனுபவசுவாதீனத்தில் இருந்து வருவதாக வழக்கில் கூறப்பட்டுள்ளது. வாதிகள் பெயரில் உள்ள தாவா சொத்தின் மேற்படி அசல் கிரையஆவணம் வா.சா.ஆ.1ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதிகளால் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 மேற்படி பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள அசல் பட்டா பாஸ்புக் ஆவணத்தில், தாவா சொத்திற்கும், பிறசொத்துக்களுக்கும் பாலகிருஷ்ணன் பெயரில் தனி சொத்து உரிமை உள்ளதாக குறிப்புகள் உள்ளது.

தாவா சொத்து, மேற்படி பாலகிருஷ்ணனுக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்து கிடையாது என்றும், தாவா சொத்து உள்ளிட்ட மற்ற சொத்துக்கள் அனைத்தும், 1ம் பிரதிவாதி குடும்பத்து, கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்றும், கூட்டுகுடும்ப கர்த்தா என்ற அடிப்படையில், மேற்படி பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட பெயருக்கு சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டுள்ளது என 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, எதிர்வாத சங்கதிகளின் அடிப்படையில், தாவா சொத்து உள்ளிட்ட மற்ற சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 1/7 பாகம் வேண்டுமென இந்நீதிமன்றத்தில், அ.வ.எண்.47/2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இருதரப்பு முழுமையான விசாரணைக்குப்பின், இந்நீதிமன்றத்தால் இன்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அ.வ.எண்.47/2015 வழக்கில் தாவா சொத்து, 1ம் பிரதிவாதியின் கூட்டுகுடும்ப பூர்வீகச் சொத்து என்ற வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்க மறுத்துள்ளதுடன், தாவா சொத்து உள்ளிட்ட பிறச்சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சகோதரர் இறந்துள்ள பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட

சொத்துக்கள் என இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு, மேற்படி வழக்கில் தாவா பரிகாரங்களை தள்ளுபடி செய்து, இந்நீதிமன்றத்தால் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், தாவா சொத்து, இறந்துள்ள பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்தா? அல்லது 1ம் பிரதிவாதி குடும்பத்து கூட்டுகுடும்ப சொத்தா? என்பது குறித்து மீண்டும் ஒருமுறை ஆராய்ந்து பார்க்கவேண்டிய சட்டப்படியான தேவை இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ஆகையால், அ.வ.எண்.47/2015 வழக்கில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் காணப்பட்டுள்ள முடிவின்படி, தாவா சொத்து இறந்துள்ள பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்து குறித்து வா.சா.ஆ.1 கிரையஆவணத்தை வாதிகள் பெயர்களுக்கு எழுதிக்கொடுத்து, தாவா சொத்தினை உரிமை மாற்றம் செய்ய அவருக்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்றும், இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

வா.சா.ஆ.1 கிரையஆவணம் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளபோது, சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண தரப்பினர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டு, அவர்களது இடதுகை பெருவிரல் ரேகை பெறப்பட்டுள்ளது. அதுதொடர்பான ஆவணங்கள் வா.சா.ஆ.1 ஆவணத்துடன் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1 ஆவணத்தில் தரப்பினர்களாக உள்ள வாதிகள் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்களின் புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளது என்பதை கண்டறிந்துகொள்ள முடிகிறது.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் பின்னிணைப்பில் காணப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் பாலகிருஷ்ணன் கிடையாது என 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு, எதிர்வாதம் செய்யப்படவில்லை. அதன்படி, வா.சா.ஆ.1 ஆவணத்தை வாதிகள் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள மேற்படி பாலகிருஷ்ணன் ஆவண பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகியுள்ளது உண்மை என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதலாவதாக சாட்சிகையெழுத்திட்டுள்ள நபரும், வா.சா.ஆ.1 ஆவண பதிவின்போது, ஆவண தரப்பினர்களை இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டுள்ள நபருமான தமிழரசன் என்பவர் வா.சா.3 ஆக இவ்வழக்கில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.3 தமிழரசன் என்பவரது வாய்மொழி சாட்சியம் வா.சா.ஆ.1 கிரையஆவணம் தகுந்த மறுபயனுக்காக ஏற்பட்டுள்ளது என்ற வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமைந்துள்ளது.

இந்நிலையில், வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் பிரதிவாதியின் சகோதரர் பாலகிருஷ்ணன் என்பவரால் வாதிகள் பெயருக்கு எழுதிக்கொடுக் கப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என்பதை வாதிகள் தகுந்த சாட்சி, சான்றாவணங்கள் மூலம் இவ்வழக்கில் நிரூபித்துள்ள காரணத்தினால், வா.சா.ஆ.1 கிரையஆவணம் தகுந்த மறுபயனுக்காக வாதிகள் பெயருக்கு மேற்படி பாலகிருஷ்ணனால் எழுதிக்கொடுக்கப் பட்டுள்ள உண்மையான ஆவணம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

வாதிகள் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள தாவா சொத்து குறித்து, வாதிகள் பெயரில் உள்ள வா.சா.ஆ.2 கணிணி பட்டா , வா.சா.ஆ.3 அ பதிவேடு நகல் மற்றும் வா.சா.ஆ.4 தீர்வைவரி ரசீது போன்றவை தாவா

சொத்தில் வாதிகளின் தொடர் அனுபவசுவாதீனத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

மேற்படி விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால், இவ்வழக்கின் எழுவினாக்கள் 1 மற்றும் 2 ஆகியவை வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, விடைகாணப்படுகின்றது.

**12) எழுவினா 3 ற்க்கான தீர்வு :**

தாவா பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்க கூடியது என மேற்கண்ட எழுவினாக்களில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், தாவாவில் வாதிகள் வேறு எந்த பரிகாரமும் பெற முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா-3 இந்நீதிமன்றத்தால் விடைகாணப்படுகிறது.

**13) முடிவில்**, தாவா சொத்தில் வாதிகளின் உரிமைமூலம் விளம்புகை செய்யப்பட்டும், தாவா சொத்தில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்தை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.27 16:17:13 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1 – ரீட்டா

வா.சா.2 – சுப்பிரமணி

வா.சா.3 – தமிழரசன்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.09.2014 | விற்கிரைய ஆவணம் அசல். |
| வா.சா.ஆ.2 | -- | கணிணி பட்டா. |
| வா.சா.ஆ.3 | -- | அ பதிவேடு நகல். |
| வா.சா.ஆ.4 | -- | தீர்வைவரி ரசீது. |
| வா.சா.ஆ.5 | -- | அசல் பட்டா பாஸ்புக். |
| வா.சா.ஆ.6 | 09.10.2014 | வழக்கறிஞர் அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.7 | 18.04.2013 | பொதுஅதிகார ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | 20.06.2013 | பொதுஅதிகார ரத்து ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.9 | -- | மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2010 தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.10 | -- | மேல்முறையீட்டு வழக்கு எண்.28/2010 தீர்ப்புரை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.12 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.13 | 25.09.2014 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.14 | 02.04.1987 | கிரைய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.15 | -- | சி.டியுடன் கூடிய புகைப்படங்கள். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> –**

பி.சா.1 – கம்சலா

பி.சா.2 – நூருல்லாபாஷா

பி.சா.3 – ராஜேந்திரன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் </u>:–**

இல்லை.

RAJA B
Digitally signed by RAJA B
Date: 2026.03.27 16:17:06 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.